**தலைப்பு 231 – கடன் இணக்கச்சபை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இந் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் இணக்கசபைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

| **முன்னைய வருடத்திற்கான அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்பட்டிராத பரிந்துரை** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1 (ஆ) | ரூபா 173,300 பெறுமதியான சொத்துக்கள், நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் வருடத்தின் சேர்த்தல்களின் கீழ் காட்டப்பட்டிருக்காமை. | 1.6.1 (ஆ)(ii) |

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவுகள்**

நிதிக்கூற்றுக்களுக்கான மீண்டெழும் செலவுகள் கணக்கிடப்பட்டபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | திறைசேரி அச்சீடு SA 10 இன் படி, சம்பளம் , ஊதியம் மற்றும் இதர ஊழியர் நலன்கள் ரூபா 21,423,491 ஆக இருந்ததுடன், ரூபா 21,642,644 என ரூபா | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும்போது தவறுதலாக உள்ளூர் பயணச் செலவுகள் ரூபா 219,153 சம்பளம் , ஊதியம் மற்றும் இதர ஊழியர் | செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 219,153 அதிகமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் மற்றும் ACA – 2 (ii) படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நலன்களுடன் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | திறைசேரி அச்சீடு SA 10 இன் படி, ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுமதி ரூபா 15,456,221 ஆக இருந்ததுடன் , ரூபா 15,237,069 என ரூபா 219,152 குறைவாக ACA – 2 (ii) படிவத்தில் நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும்போது தவறுதலாக உள்ளூர் பயணச் செலவுகள் ரூபா 219,153 சம்பளம் , ஊதியம் மற்றும் இதர ஊழியர் நலன்களுடன் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. | செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கணக்கிடப்பட்டபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| | - | | |
| (i) | திறைசேரி அச்சீடு SA 82 இன் படி, 2021 திசெம்பர் 31 இல் அலுவலக உபகரண மீதி ரூபா 517,818 ஆக இருந்ததுடன் , 2022 சனவரி 01 இல் அது ரூபா 677,581 என ரூபா 159,763 அதிகமாக முன் கொண்டு வரப்பட்டிருந்தது. அத்துடன் கணனி இயந்திரங்கள் மற்றும் மரத் தளபாடங்கள் முறையே ரூபா 138,000 மற்றும் ரூபா 21,763 குறைவாக முன் கொண்டு வரப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் திணைக்களத்திற்குச் சொந்தமான அலுவலக உபகரணங்கள், கணனி இயந்திரங்கள் மற்றும் மரத் தளபாடங்களின் கிரயப் பெறுமதி தவறுதலாக ரூபா 677,581 , ரூபா 3,534,788 , ரூபா 5,060.899 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | ஆரம்ப மீதிகள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ii) | கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 173,300 ஆன நிதியல்லாச் சொத்துக்கள் மீளாய்வாண்டிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பொருட்கள் நிலையான சொத்துக்களின் கீழ் வராததால் எழுதுகரவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் (1201) மற்றும் ஏனையவை (1409) இன் கீழ் கணக்கிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்கள் கையகப்படுத்தல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அறிக்கையின் படி ரூபா 967,042 ஆன பொறுப்புக்கள் அறிக்கையிடப்படாததுடன் , கணக்கு குறிப்பு (iv) இல் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் ரூபா 967,042 ஆன பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (IV) இல் காட்டப்பட்டுள்ள ரூபா 967,042 ஆன பொறுப்புக்கள் 2022 கணக்காண்டு முடிந்த பிறகு 2023 ஆம் ஆண்டில் , 2022 ஆம் ஆண்டுடன் தொடர்பான பட்டியல்கள் என்பதால் அப்பெறுமதி பொது திறைசேரிக்கு குறிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. (cigas வழியாக) எனினும், கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டபடி, எதிர்காலத்தில் அத்தகைய பட்டியல்கள மதிப்பிடப்பட்ட மதிப்புகளுடன் திறைசேரிக்கு அறிக்கையிடப்படுமென்பதாக தெரிவிக்கப்பட்டது. | பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் சரியாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

### 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டி இருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு அதன் பின்னர் அந்த முறைமையின் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் செய்யப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்க வேண்டி இருந்தும், அவ்வாறான மீளாய்வு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்வதற்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ii) | வருடாந்த மற்றும் பிற நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்திற்குள் தயாரிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டிய போதிலும் , அறிக்கையின் 3.2 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்பு காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்தத் திணைக்களத்தின் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திறன் அறிக்கைகள் 2022.04.19 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்திறன் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், திட்டமிடப்பட்ட திகதிககு முன்னதாக சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| (i) | சட்ட ஏற்பாடுகள் 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக்கட்டணம் (விசேட ஏற்பாடுகள் சட்டத்தின்) திருத்திய | | 27 சந்தர்ப்பங்களில் ரூபா 25,000 இற்கு அதிகமான மொத்தம் ரூபா 2,008,371 ஆன கொடுப்பனவுகளுக் காக சட்டத்தின் | 2023 சனவரி 01 இல் இத்திணைக்களம் முத்திரை வரிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.அத ன் பிரகாரம் தற்போது | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசெட வர்த்தமானி அறிவித்தல் | | பிரகாரம் முத்திரைக்கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முறையாக ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக முத்திரைக்கட்டணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | கடன் இணக்கசபை அதிகாரச் சட்டத்தின் 2 மற்றும் 3(2) ஆம் பந்திகள் | | கடன் இணக்கசபை உறுப்பினர் குழு தலைவர் மற்றும் 04 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டியதுடன் , அதன் முழு அமைப்பு மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், அதன் முழு அமைப்பு முழுமையடையாதிருந்த போது வழக்கு விசாரணை நடவடிக்கைகள்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | குறிப்பிட்ட திகதியில் கடன் இணக்கசபையின் பிரதான குழுவில் தலைவர் உட்பட 04 உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்ததுடன், அத் திகதிகளில், இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே விசாரணையில் பங்கேற்றதுடன், இரு தரப்பினருக்கும் கோரல் கடிதம் அனுப்பப்பட்டதாலும், அவர்களால் பணம் செலுத்தப்பட்டு வழக்கறிஞர்கள் அழைத்து வரப்பட்டதாலும், அன்றைய தினம் கூட்டம் நடாத்தப்பட்டு, அடுத்த திகதி நிர்ணயிக்கப்பட்டது. விண்ணப்ப விசாரணையொன்று அல்லது தீர்வுகளோ அதில் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. | 1941 இன் 39 ஆம் இலக்க கடன் இணக்கசபை அதிகாரச் சட்டத்தின் 2 மற்றும் 3(2) ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை நிதிப்பிரமாணம் 371(5) | 200,000 | இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 200,000 ஆன செயல் நிமித்த இடைக்காலக் கட்டுநிதி தீர்க்கப்பட்டபோது சுற்றறிக்கைப் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் உரிய பணி மடிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் அக்கட்டு நிதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நோக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்கள் மீது பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் கொடுக்கல் வாங்கலினால் பாதிப்புக்குள்ளானவர்கள் அக்கடன் பளுவிலிருந்து மீட்சி பெறுவதற்கு நிவாரண செயல் திட்டமொன்றினை தயாரிப்பதற்காக போதியளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டில், வடமாகாணத்தை இலக்காகக் கொண்ட 05 மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் சனவரி மாதத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன், வேறு எந்த பிரதேசத்திலும் மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | திணைக்களத்தின் செயற்பாடுகள் உள்ளடங்கிய சுவரொட்டி நீதி அமைச்சின் அனுசரணையுடன் காலி, குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்ட கிளைச் சபைகளுக்கு உட்பட்ட மாவட்டங்களின் பிரதேச செயலக அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டன. அதன் பிரகாரம் குறித்த விழிப்புணர்வு முறையாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.2023.03.23 அன்று நீதி அமைச்சின் ஒரு ஊடக கலந்துரையாடலில், திணைக்களம் பற்றிய அறிமுகம் மேற்கொள்ளப்பட்டதுடன், அது அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிறுவனத்தை ஸ்தாபிப்பதன் முக்கிய நோக்கத்திற்கு ஏற்ப செயற்பாடுகளை அடையாளம் காண்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி எண். 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவுற்ற 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் , 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களுக்கான | 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் 2023.04.19 பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.. | குறிப்பிட்ட தினத்தில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் 2023 ஏப்ரல் 19 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி எண். 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படி மீளாய்வாண்டின் வருடாந்த கணக்குகளுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க ஆண்டு கணக்குகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 அரச உத்தியோகத்தர் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டத்தின் மற்றும் 2011 சனவரி 18 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க நீதி அமைச்சு சுற்றிக்கையின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 04 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை வைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டும். |

### 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி 11 அன்று நடந்த மோட்டார் வாகன விபத்து தொடர்பாக, நிதிப் பிரமாணம் 104 (3) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கை 2023 பெப்ரவரி 21 அன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் மற்றும் | 2022 திசெம்பர் 15 அன்று பொலிஸ் அறிக்கையைப் பெற்ற பின்னர் 2023 பெப்ரவரி மாதம் அவ்விசாரணை முடிக்கப்பட்டுள்ளதாகவும், 2022 ஆம் ஆண்டில் நி.பி | நிதிப் பிரமாணம் 104 (3) மற்றும் (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் நட்ட இழப்பீடு நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிப் பிரமாணம் 104 (4) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான் இறுதி அறிக்கை 2023 மார்ச் 10 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மோட்டார் வாகனத்திற்கான 7பா 101,800 ஆன நட்டம் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடுதல்கள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 104 விசாரணையை முடிப்பதற்கு முடியாததால், அவ்விபத்து தொடர்பான சேதங்கள் நட்டங்கள் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. | உள்ளடக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | வாகனத் திருத்தங்களுக்காக அரச தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அரச தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரை நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | வாகனத் திருத்தங்களின்போது அரச தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரை பெறப்பட வேண்டும். |

**3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2022 சனவரி 01 அன்று முன் கொண்டு வரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் மாற்றங்கள் காணப்பட்டன. | 2023 பெப்ரவரி மாதம் பிரதான கிளையில் மற்றும் அனைத்து கிளைகளின் வழக்கு கோப்புகள் கைமுறையாக எண்ணப்பட்டன. அதன்படி, கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி ஆரம்ப வழக்குகளின் எண்ணிக்கை சரியானது என்று தெரிவிக்கப்பட்டது | முறையாக அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்கள அறிக்கைகளின்படி, 2022 திசெம்பர் 31 இல் இருக்க வேண்டிய வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் பௌதீக திணைக்களத்திற்குச் சொந்தமான வழக்குக் கோப்புகளின் எண்ணிக்கை என்பவற்றுக்கிடையே வித்தியாசம் காணப்பட்டதுடன் அதன்படி, பிரதான கிளையில் | பிரதான கிளையில் காணப்பட்ட 836 வேறுபாட்டிற்கு காரணம், 2022.01.18 அன்று குருநாகல் கிளையும், 2022.11.28 அன்று கொழும்பு கிளையும் திறக்கப்பட்டதால், பிரதான கிளையின் வழக்குக் கோப்புகள் அந்தக் கிளைகளுக்கிடையே பிரிக்கப்பட்டமை மற்றும் | முறையாக தரவு முறைமையொன்று பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 836 வழக்குக் கோப்புகள் மற்றும் கம்பஹா கிளையில் 03 வழக்குக் கோப்புகள் பற்றாக்குறையொன்றும், காலி கிளையில் 59 வழக்குக் கோப்புகளின் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டன. | 2023 பெப்ரவரியில் அனைத்து கிளைச் சபைகளின் வழக்குக் கோப்புகள் கைமுறையாக எண்ணப்பட்டபோது வழக்குக் கோப்புகளில் வித்தியாசமொன்று மற்றும் காலி கிளை மற்றும் கம்பஹா கிளைகளில் உள்ள வழக்குக் கோப்புகளில் வேறுபாட்டிற்கு காரணம் , 2023 பெப்ரவரியில் அனைத்து கிளைச் சபைகளின் வழக்குக் கோப்புகள் கைமுறையாக எண்ணப்பட்டபோது வழக்குக் கோப்புகளில் எண்ணிக்கையில் வித்தியாசமொன்று காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை தேசிய மட்டத்தில் தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் நிறுவன, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் அடைந்து கொள்வதற்காக ஒருங்கிணைப்பதற்கான சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் பெயரிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு 2023 ஏப்ரல் 17 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | 2018 ஏப்ரல் 27 ஆந் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளினை தேசிய மட்டத்தில் தந்திரோபாய முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் நிறுவன, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் அடைந்து கொள்வதற்காக ஒருங்கிணைப்பதற்கான சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் பெயரிடப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சிற்கு 2023 ஏப்ரல் 17 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிட்ட திகதியில் உரிய நியமனத்தை மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 5. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதவியணியினரில் 01 சிரேஷ்ட நிலையில் 01 வெற்றிடம் மற்றும் ஆரம்ப நிலையில் 01 வெற்றிடமும் காணப்பட்டதுடன், இரண்டாம் நிலையில் 05 மிகை காணப்பட்டது. | சிரேஷ்ட நிலையில் கணக்காளர் பதவிக்கான வெற்றிடம் உள்ளதாகவும், இரண்டாம் நிலையில் 14 அபிவிருத்தி அலுவலர் மிகையும் ஆரம்ப நிலையில ஒரு சாரதி பதவிக்கான வெற்றிடம் உள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டது. | பதவியணியினரின் எண்ணிக்கையில் உள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கும், மிகை பதவியணியினரின் எண்ணிக்கைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் படி, நிரந்தர நியமனமொன்று செய்யப்படும்வரை ஒரு தற்காலிக தீர்வாக பதில் கடமை நியமனமொன்று செய்யப்பட வேண்டிய போதிலும், 2021 மார்ச் 17 முதல் வெற்றிடம் காணப்பட்ட கணக்காளர் பதவிக்காக 2023 மார்ச் 22 வரை நிரந்தர நியமனமொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிபிபாளர் நாயகத்தின் DMS/1506/IV ஆம் இலக்க 2021.03.17 ஆம் திகதிய கடிதத்தில் கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டபோதிலும் 2021 ஆம் வருடத்தின் பின்னர் இற்றைவரை கணக்காளர் சேவையின் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படாமையால் இற்றைவரை நிரந்தர பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு முடியாதிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும |